செ.வெ.எண்:07 நாள்:05.01.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள்(காதுகேளாதோர், வாய்பேசாதோர், கண் பார்வையற்றவர்கள்) தங்களது முன்னுரிமை சான்றினை சென்னையில்இயங்கி வந்த மாற்றுத்திறனாளிகள் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வந்தனர். அரசாணை நிலை எண்.168 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (ஆர்1) துறை, நாள் 20.11.2018-இல் அறிவுறுத்தியவாறு 03.12.2018 முதல் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவு அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ளது.

மேலும் வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை திட்டத்தில் பயன்பெற மாற்றுத்திறனாளிகளுக்கான முன்னுரிமை பதிவு செய்து ஒரு வருடம் பூர்த்தி செய்திருக்கவேண்டும். எஸ்.எஸ்.எல்.சி தோல்வி மற்றும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.600/-ம், மேல்நிலைக்கல்வி மற்றும் டிப்ளமோ தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.750/-ம் மற்றும் பட்டதாரி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.1000/-ம் உதவித்தொகை வழங்கப்படும். இம்மாவட்டத்தினைச் சார்ந்த அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளும் தங்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு, கூடுதல் கல்வித்தகுதி, முன்னுரிமை பதிவு மற்றும் போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி, திறன் பயிற்சி, தனியார் துறை வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்து வகையான சேவை தொடர்பாக அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**